22 SEP 1971

சமாதானம், சண்டைப்பிரகடனம்: குடியரசு

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 223

சாதாரண புரட்டாதி 6 ஷஃபான் 1 புதன்கிழமை (22-9-71)

## தலைவருக்கே அதிகாரம்
### பீலிக்ஸ் சமர்ப்பித்துள்ள திட்டம்

கோட்டை, செவ்.

சமாதானம், சண்டை ஆகியவற்றைப் பிரகடனப் படுத்துவதற்குக் குடியரசின் தலைவருக்குப் பூரண அதிகாரம் இருக்கவேண்டும்.

இப்போது வரையப்பட்டு வரும் புதிய அரசியல் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்காக உள்நாட்டு உள்ளுராட்சி மன்ற பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா அரசாங்கத்திடம் மேற்கண்ட நகல்திட்டத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் புதிய அரசியல் திட்டத்துக்கு திரு. பீலிக்ஸ் சமர்ப்பித்துள்ள நகல்திட்டங்கள் வருமாறு:-

அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் குடியரசுத் தலைவியின் விருப்பத்தைப் பெற்று எவ்வளவு காலமும் பதவியில் இருக்கலாம்.

அரசாங்கம் அனுராதபுர ஸ்ரீமகாபோதி கண்டி தலதா மாளிகை கதிர்காமத்தேவாலயம் போன்ற பௌத்த

(6-ம் பக்கம் பார்க்க)

## 22 பேர் பலி

புதுடில்லி, செப் 20.

நேற்று பம்பாயில் எதிர்பாராத விதமாகவீடு ஒன்று இடிந்து விழுந்ததால் இருபத்திரண்டு பேர் இறந்தனர்.

## அமைச்சராயினும், எம்.பி க்களாயினும்
# கடமையை செய்யா விட்டால் பதவியைத் துறக்கவேண்டும்!
## யாழ்.நகரில் குமாரசூரியர்

—நமது நிருபர் ஏ. தேவராசா

யாழ்ப்பாணம், புதன்

“பதவி பஞ்சணை மெத்தையல்ல, மக்களுக்கு ஊழியம் செய்வதற்காகவே நாங்கள் பொறுப்பை ஏற்றுள்ளோம். அமைச்சர்களாயினும் சரி, எம். பிக்களாயினும் சரி மக்கள் தங்கள் எஜமானர்கள் என்ற எண்ணத்துடன் சரிவரக் கடமை செய்யாத பட்சத்தில் பதவிகளைத் துறந்து விடவேண்டும்” என்று யாழ். நகரில் தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் கூறினார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புதிய உபதபால் நிலையத்தை தபாலமைச்சர் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமை வகித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

“இந்த நாட்டின் சாதி வேற்றுமையை ஒழிக்க மக்கள் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சாதி வேற்றுமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதை மக்கள் அரசு படிப்படியாக நிறைவேற்றும். இது இரண்டொரு நாளைக்குள் செய்து முடிக்கக் கூடிய விஷயமல்ல”

“இன்று நடப்பது மக்கள் அரசு. அமைச்சர்கள் மக்கள் ஊழியர்கள், மக்கள் இந்நாட்டு மன்னர்கள். ஆகவால் அவர்களின் குறைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும்.

நகரப் புறங்களில் உள்ள வசதிகளை கிராமப்புறங்களிலும் ஏற்படுத்த மக்கள் அரசு பாடுபடும்.

சகல இனமக்களும் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். மக்கள் அபிப்பிராயத்திற்கு இடமளிக்க வேண்டும் என்பதற்காகவே மக்கள் கமிட்டிகள் நிறுவப்பட்டு வருகிறது. மந்திரிகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதே போலதான் எம். பிக்களும் மக்கள் தேவைகளில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல்வாதிகள் மக்களுக்காகவே பாடுபட வேண்டும். அவர்கள் பஞ்சணையில் படுத்துறங்குபவர்களல்ல. இதனை கடந்த 15 மாத காலத்தில் உணர்ந்திருக்கிறேன்.

அரசியல் வாதிகள் மேடையில் ஏறி வீண் கோஷங்களை எழுப்பி நேரத்தை கழிக்காமல் நாட்டுக்கு பயன்படக் கூடிய விதத்தில் ஏதாவது செய்ய முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுகிறேன்.

### மோசடி

தாலிக்கொடிக்கும் மோதிரத்துக்கும் தந்திக் கம்பிகள் இரையாகின்றன. தந்திச் சீர்கேட்டுக்குக் காரணம் இந்த மோசடிகள் தான்.

இந்த நாட்டில் 59 ஆயிரம் தொலைபேசிகள் இருக்கின்றன. இதில் 20 ஆயிரம் தொலைபேசிகள் அரசாங்க அலுவல்களுக்கானது. மற்றைய 39 ஆயிரந்தான் பொது மக்களின் பாவிப்புக்கு. தொலைபேசி உயர் மட்டக்காரரின் பெருமைச் சின்னமாக இருந்து வந்தது. ஆனால் இனி பொது மக்களின் பாவனைக்காக மட்டும் தொலைபேசிகள் உபயோகிக்கக் கூடிய விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாணம் நகரசபைக்கு முன்னால் முதலாவது பொதுத் தொலைபேசிக் ‘கூடு’ அமைக்கப்படும். யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்னாலும் மற்றொரு ‘கூடு’ நிறுவப்படும்.

யாழ்ப்பாணம் கொழும்பைப் போன்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.”

வடமாநில தபால் தந்தி பகுதி அத்தியட்சகர் திரு. எம். நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் பேசும் போது: தபால் அமைச்சர் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி தபால் தந்தி சேவையை அபிவிருத்தி செய்து வருகின்றார். என்றார்.

நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசும் போது. கொழும்பு யாழ்ப்பாணம் தொலைபேசி

(6ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிப் பாளங்கள் வலையில் சிக்கின

இருபதினாயிரம் ரூபாய் பெறுமதியான கடத்தல் பொருட்கள் வல்வெட்டித்துறையில் சிக்கின. பெண்மணி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

85 வெள்ளிப் பாளங்கள் நைலோன் வலைகள் உட்பட பல பொருட்களை வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சிறிவர்த்தன தலைமையில் சென்ற கோஷ்டி கைப்பற்றியது.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் சுங்கப்பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டன. பொருட்களின் சொந்தக்காரர் என்ற சந்தேகத்தின்பேரில் பெண்மணி ஒரு யாழ்ப்பாணம், புதன் வரை பொலிசார் கைது செய்தார்கள்.

## இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், புதன்

இன்றும் நாளையும் யாழ். பொது நூல் நிலையத்தில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி பொருளாதார விரிவுரையாளர் டாக்டர் சி. ரி. குறியன் சொற்பொழிவாற்றுவார்.

இன்றுமாலை 5 மணிக்கு அவர் “அபிவிருத்தியும் பகைமையும்” என்னும் பொருள்பற்றியும் நாளை “அபிவிருத்தியும் மனிதாபிமானமும்” என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றுவார்.

# இரத்தினபுரியில் வெள்ளப்பெருக்கு
## 40 கிராமங்கள் பாதிப்பு
## 4 ஆயிரம் பேர் வீடிழப்பு

கோட்டை செவ்வாய்

இரு தினங்களாக பெய்த மழை காரணமாக இரத்தினபுரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களாகக் கொழும்பிலும் வெளி இடங்களிலும் பெருமழை பெய்துள்ளது. இப்பகுதிகளில் இரத்தினபுரி அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாக 40 கிராமங்கள் பாதிக்கப்பட்டதோடு 4 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வீடுவாசல்களை இழந்துள்ளனர்.

இத்தகவலை இரத்தினபுரி அரசாங்க அதிபர் திரு. எஸ். வி. சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இவ்வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலைகளிலும் கோவில்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு வேலைகளில் ஈடுபடுத்த மீட்புப் படகுகளைக் கொடுத்துதவுமாறு கடற்படையினரை இரத்தினபுரி அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாங்கஅதிபரின் இருப்பிடம்கூட வெள்ளத்தால் சூழப்பட்டிருப்பதால் அவர் படகுமூலமே தனதுபோக்குவரத்தைச் செய்துகொண்டிருக்கிறார்.

இதே நேரத்தில் களுகங்கையின் நீர் மட்டம் அதி

(6ம் பக்கம் பார்க்க)

## லிடோ [யாழ்நகர்]

(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)

கிங்ஸ்லி (கொழும்பு)



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் கதை - வசனம் - டைரக்ஷனில் உருவாகி

ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்

சுந்தரராஜன் - நம்பியார்—நாகேஷ் - வாசு நடித்த

# தபால்காரன் தங்கை

உள்ளத்தைத்தொடும் 6-வதுவாரம்

## வெலிங்டன (யாழ்ப்பாணம்)

பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00

# தெய்வ மகன்



சிவாஜி [3 மாறுபட்ட வேடங்களில்]

ஜெயலலிதா

நம்பியார் — நாகேஷ்

சுந்தரராஜன் நடித்தது.

## நாகம்ஸ்சினிமா

கன்னாகம்

தினசரி: 4-30 மட்டும் சனி, ஞாயிறு 10-30

ON THE BEAT

தினசரி 6-30, 9-45 சனி, ஞாயிறு 2-30

ஜெமினி-காஞ்சனா நடித்த

'சாந்தி நிலையம்'

(ஈஸ்ட்மன் கலர்)

## MANOHARA Jaffna

Daily 4-45, 7&9-45 p.m.

Dougncclure

Katharine Ross

in

THE LONGEST HUNDRED MILES

(war film-color)

## REGAL Jaffna

Daily 5-15 & 7-15 p. m.

Sat, Sunday 10-30 a.m.

Anthony Quinn,

Anna Karina

in

THE MAGUS

(color)

தினசரி 2-00, பி.ப. 9-45

ரவிச்சந்திரன் கே. ஆர். விஜயா நடித்த

இதயக்கமலம்

(கலர்-புதியகொப்பி)

## வெல்லிசினிமா

மானிப்பாய்

பி ப 2-30, 6-30, 10-00

எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த

நான் ஆணையிட்டால்


## விற்பனைக்கு

சோடா அத்தர்! சோடா தயாரிப்பாளர்களால் அதிகம் பாவிக்கப்படுவது சுருட்டுக்குச் சிறந்த மணத்தையும், குணத்தையும் கொடுக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காலிகேசன் துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு. கொழும்பு. 3523

நல்லநிலையிலுள்ள விஸ்ரச இயந்திரம் S, P. E. C 18/2/35 குதிரைச் சக்தி 21 R P M 1200 விற்பனைக்குண்டு. இதனுடன் நெல்லுக் குத்தும் ஹல்லரும், பிடைக்கும் பெட்டியும் உண்டு. அ. சுப்பிரமணியம், 4, சுவாமியார் வீதி, யாழ்ப்பாணம். 3589

4 ஸ்ரீ தொடர்புள்ள இறக்குமதி செய்யப்பட்ட லம்பிறற்றா ஸ்கூட்டர் 150 c c. விற்பனைக்கிருக்கிறது. கடித மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். த. நாகநாதன், புகையிரத நிலையம், ஆனையிறவு. 8601

## தேவை

7 1/2 வருடகாலமாக இயங்கி வரும் பிரபலமான நடன, சங்கீத பாடசாலைக்கு, கலாஷேத்திரா முறையில் பயின்ற நடன ஆசிரியை தேவை விண்ணப்பமுடிவு திகதி 10-10-71. விளம்பர இல; 3592, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3592

## வரி விளம்பரம்

காலம் பொருமதியானது. ஒரு மைக்கல் மிக்கைவத் தலைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்யலாம். வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்கைவத் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்! 3520

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட எஞ்சினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். சாதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

## தேவை

கைத்தறி நெசவில் வேலை செய்த அனுபவமுள்ள பெண் நெசவாளர்கள் தேவை. டோபி வேலை தெரிந்தவர்களுக்கு கூடிய சம்பளம் கொடுக்கப்படும். கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேரில் விண்ணப்பிக்கவும். சிற்றெக்ஸ் (இலங்கை) கொழும்புத்துறை மகாவித்தியாலயத்திற்கு முன்பாக, 92, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம். 3599


## ராணி (யாழ்ப்பாணம்)

ஜெமினி - சரோஜாதேவி நடித்த

தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்

# சிநேகிதி

## ராஜா (யாழ்ப்பாணம்)

ரி. எம். சௌந்தரராஜன் ஏ. எல். ராகவன்; ராஜ்ஸ்ரீ நடித்த

தினசரி 4 காட்சிகள்

# கல்லும் கனியாகும்

எல்லாப் பத்திரிகைகளும் ஏகோபித்துப் பாராட்டும் ஒரே படம்!

மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளும் மகத்தான குடும்பச் சித்திரம்!!


★ தாய் என்பவள் தந்தை ஆகலாம்- தனயன் ஆகலாம் - ஆசான் ஆகலாம்- ஆண்டவன் ஆகலாம்!

★ எந்த ஒரு இடத்தையும் தாயால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் வேறு எவராலும் தாயின் புனிதமானஇடத்தை ஈடுசெய்யவே முடியாது.



★ கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது என்பதால்தான் உலகில் தாயைப் படைத்தார்!

★ தாய் என்பவள் காவியம்! இது ஒரு தாயின் கதை!! ஆகவே இது காவியத்தின் கதை!!!



யாழ்.வின்ஸர் வெண்திரையில்

நாளை 23—9—71 முதல்

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன் ★

★ சௌகார் ஜானகி ★

(இரு வேடங்களில்)

ரவிச்சந்திரன்-எம். ஆர். ஆர். வாசு

எஸ்.வரலட்சுமி — வி.எஸ்.ராகவன்

பேபி டாலி

நடித்த







# காவியத் தலைவி

கதை-வசனம்-டைரக்ஷன்:- கே. பாலச்சந்தர்

இன்று மட்டும் குலேபகாவலி

## புதுடில்லி சர்வதேச மகாநாடு

# 'பங்களா தேஷை' அங்கீகரியுங்கள்!

## உலக நாடுகளிடம் கோரிக்கை

புதுடில்லி, செப் 21

பங்களாதேஷை அங்கீகரிக்க வேண்டும் என்று உலகநாடுகளுக்கு புதுடில்லியில் நடந்த சர்வதேச மகாநாடு கோரிக்கை விடுத்துள்ளது.

வங்காளதேசப் பிரச்னையை ஆராயக்கூடிய சர்வதேசப் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூன்றுநாள் நடந்த மகாநாடு நேற்றுடன் முடிவடைந்தது. சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

கிழக்கு வங்காளத்தில் நடக்கும் இரக்கமற்ற ராணுவக் கொடுமைக்கு மகாநாடு பலத்த கண்டனம் தெரிவித்ததுடன் உலகநாடுகள் பரிதவிக்கும் வங்காளதேஷுக்கு உடனடியாக உதவி அளிக்க வேண்டுமென்றும் கோரியது. உலகநாடுகளும் உலகமக்களும் உடனடியாக இந்த உதவிகளை வழங்க வேண்டுமென்று மகாநாடு வற்புறுத்தியது.

பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி அளிப்பதை உலக நாடுகள் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் மகாநாடு கோரிக்கை விடுத்தது.

கிழக்குவங்கப் பிரச்னைக்கு உடனடி அரசியல் தீர்வு காண வேண்டுமென்றும் வற்புறுத்தியது.

இந்த விடுதலைப் போராட்டத்தில் மனித உரிமைமீறப்படுகிறது என்று மகாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் வங்காள மக்களின் தலைவர் ஷேக் முஜிபுர்ரஹ்மான் நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அத்தோடு மக்களால் பாகிஸ்தான் தேசிய சட்டசபை, மாகாண சட்டசபை ஆகியவற்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கோரும் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களை மகாநாட்டுத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கொண்டுவந்திருந்தார்.

மகாநாட்டில் இலங்கை குழுவுக்கு செனரத் குணவர்த்தனா தலைமை வகித்தார். திருமதி விவியன் குணவர்த்தனா, திரு. அமரதாசா பெர்னாண்டோ, திரு. தேஷ்மன் பெர்னாண்டோ, திரு. ச. வைத்தியசேகரா ஆகியோர் கொண்ட குழு இம்மகாநாட்டில் கலந்து கொண்டது.

---

பெல்பாஸ்டில்

### சமாதான துண்டுப் பிரசுரங்கள்

பெல்பாஸ்ட், செப். 21

இந்திய யோகி சுவாமி விஷ்ணுவும், திரைப்பட நடிகர் திரு. பீற்றர் செல்லர்ஸும் போரினால் பாதிக்கப்பட்ட அல்ஸ்டரில் 'பெல்பாஸ்ட்' எனும் இடத்திற்கு விமானமூலம் சமாதானத் துண்டுப் பிரசுரங்களை வீசினர். இவர் இங்கு புரட்டஸ்தாந்து சமயத் தலைவர் வண. அயன் பெய்ஸ்லியையும் மிதவாதிரவின் பிரித்தானிய ஆட்சி மன்ற உறுப்பினரான செல்வி பேர்னடேட் டெவ்லினையும் சந்திப்பார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கலவரம் நடைபெறும் பகுதிகளான பாகிஸ்தான் வியட்னாம் ஐரோப்பிய பகுதிகளுக்கும் 5 மாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்யவுள்ள யோகி முதற்தடவையாக இங்கு சென்றுள்ளதை குறிப்பிடத்தக்கது. தன் தியானத்தின் போது கண்ட காட்சியினால் உந்தப்பட்டு இப்பணியில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார்.

### இலங்கையர் பயிலும் வரிவிதிப்புத் திட்டம்

லண்டன், செப். 21

லண்டனில் பிரிட்டிஷ் கவுன்சில் நடத்தும் வரி விதிப்புப்பயிற்சிக்கு இரண்டு இலங்கையர்கள் தெரிவாகியுள்ளார்கள்.

உள்நாட்டு இறைவரி இலாகாவைச் சேர்ந்த இரு சிரேஷ்ட வரிமதிப்பீட்டாளரான திரு கதிரவேலு ராஜசிங்கமும் திருமதி மொறீன் டி. எவ். குணவர்த்தனாவும் லண்டனில் பதினாறு பயிற்சி பெறுவார்கள். இம்மாத இறுதியில் லண்டன் செல்லும் இவர்களின் பயிற்சியை பிரிட்டன் கொழும்புத்திட்ட தொழில் நுட்ப உதவித்திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்துள்ளது.

### தீர்ப்பை எதிர்த்து அப்பீல்

மாவிட்டபுரம் செவ்வாய்

யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தடை உத்தரவுத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டுக்கு அப்பீல்செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தாவுக்கும் உற்சவகால நிர்வாகி வி. சுந்தரலிங்கத்துக்கும் தடையுத்தரவு வழங்கி யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது தெரிந்ததே. இத்தீர்ப்புக் குறித்து ஆராய மாவை ஆலய நித்திய வழிபடுவோர் சங்கம் வி. சுந்தரலிங்கம் தலைமையில் கூடிய சமயம் பலர் பலவிதமான ஆலோசனைகளை வழங்கினார்கள். இறுதியில் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வதென முடிவாகியது.

---

ஐ.நா.வில் சீனு!

### அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்துக்கு பலத்த ஆதரவு

வாஷிங்டன், செப். 21

ஐ. நா.வில் சீனுவைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனத் தாம் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்துக்குப் அமோக ஆதரவு இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இவ்வார இறுதியில் ஐ.நாவில் சீனுவைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று அமெரிக்கா தீர்மானம் கொண்டுவரவிருக்கிறது.

---

துருப்புக்களை ஏற்றிச் சென்ற

### பாக். மோட்டார் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன!

புதுடில்லி, செப். 21

பாகிஸ்தான் துருப்புக்களை ஏற்றிச் சென்ற மூன்று பாகிஸ்தான் மோட்டார் படகுகளை விடுதலைவீரர்கள் மூழ்கடித்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

டாக்காவில் 30 பாகிஸ்தான் துருப்புகளை கொன்றுவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாக் துருப்புகளை ஏற்றிச் சென்ற ரயில் ஒன்றை விடுதலைப்படையினர் தடம்புரளச்செய்ததன் மூலம் 19 பேர் மாண்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 15-ம் திகதி பாக். ராணுவ ரயில் ஒன்றை விடுதலை வீரர்கள் தகர்த்ததால் 17 பேர் மாண்டனர்.

---

முன்னாள் மேயர்மீது

### மேலதிக பணம் ரூ.39,869 அறவிடுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள்மேயர் திரு. ரி. எஸ். துரைராஜாவிடமிருந்து ரூ. 39869-69 சதம் மேலதிகப் பணமாக அறவிடுமாறு ஓடிட்டர் ஜெனரல் உத்தரவிட்டுள்ளார்.

இது ஒரு ஒழுங்கீனமான செலவினம் என்றவகையில் மேற்படி பணத்தை திருப்பி செலுத்துமாறுதிரு. துரைராஜாவுக்குநோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1963-ம் ஆண்டு திரு. துரைராஜா மேயராக இருந்தபோது தற்போதைய பஸ் நிலையத்தில் ஒரு மார்க்கட் கட்டடம் அமைத்தது சம்பந்தமான செலவினத்தின் பெயராலேயே இந்த மேலதிக பணம் அறவிடப்படவிருக்கிறது.

### பிரயாணிகளுக்கு அதிர்ஷ்டம்

காங்கேசன்துறை, செவ்.

காரைநகர் — காங்கேசன்துறைக் கடலில் பாலையில் இருக்கும் பாதைக்கு சக்திவாய்ந்த மோட்டார் யந்திரத்தை இணைக்க யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிகிறது.

### நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்

சந்தரோடை இந்து இளைஞர் மன்றத்தினர் நவராத்திரி விழாக் கொண்டாடுகின்றனர். தினமும் பஜனைகள், சைவப் பெரியார்களின் சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் முதலியன இடம்பெறும்.

0 0 0

காங்கேசன்துறை, செவ்.

பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான புங்குடுதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்திலும் நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது.

0 0 0

சரவணை—தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி ஆலயத்திலும் நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது.

### வீதி விஸ்தரிப்பு

சுழிபுரம் செவ்வாய்

தொல்புரம் பறாளை வெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பகிரங்கவீதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

பெரிய மரங்கள் வெட்டப்பட்டு போக்குவரத்திற்கு மிக வசதியாக தேவையானதாக இது அமைந்துள்ளது.

---

## மாறிவரும் உலகில் மர்மமான ஆராய்ச்சி!

லண்டன், செப். 20

மனிதனுக்குக் காலத்தை அறிவித்துக் கொண்டேயிருக்கிறது மணிக்கூடு. இது உலகிலுள்ள சகல இடத்துக்குமே பொதுவானது. அதே போன்று எமது உடலுக்குள்ளும் ஒரு மணிக்கூடு இருக்கிறது. இந்த மணிக்கூடு, எமது உறுப்புகளின் இயக்கங்களைப் பொறுத்து "நாம் இன்ன நேரத்தில் இன்னது செய்யவேண்டும்" என இடித்துக் கொண்டேயிருக்கிறது.

உலகத்திற்குப் பொதுவான மணிக்கூடானது, தேசத்திற்குத் தேசம் மாறுபட்டு இருப்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இந்த "உயிரியல்" மணிக்கூடானது, எங்கு சென்றாலும் எதுவித மாறுபாட்டையும் காட்டுவதில்லை. உதாரணமாக ஒரு பிரதேசத்திலிருந்து நாம் முற்றிலும் மாறுபட்ட பிரதேசத்திற்குச் செல்கிறோம். அப்போது நமது உடல்தான் புதிய காலநேரத்தைஅறிந்து கொள்கிறதே தவிர "உயிரியல்" மணிக்கூடானது இன்னும் புறப்பட்ட காலத்தின் படியே இயங்கிவருகிறது.

இதோ இன்னும் ஒரு உதாரணம் இன்று காலத்தையும் ஒலியையும்விட வேகமாகச் செல்லும் விமானங்கள்இயங்குகின்றன. அவ்விமானமொன்றில் ஐரோப்பாவிலிருந்து மாலை நேரம் புறப்பட்டு ஏழு அல்லது எட்டு மணித்தியாலத்தில் தென் அமெரிக்காவிற்கு கிழக்குக் கரையோரமாகச் செல்கிறோம். அங்கு இறங்கியது. எமது வெளியுடல் இன்னும் மாலை நேரமாக இருக்கிறது என்பதை உணருகிறது. ஆனால் எமது உயிரியல் மணிக்கூடு, "இரவு படுக்கைக்கு நேரமாகிவிட்டது"

என்று இடித்துக் கூறுகிறது.

மன்செஸ்டர் சர்வகலாசாலையிலுள்ள விஞ்ஞானிகள் இப்பிரச்னைக்கு ஏதாவது ஒரு முடிவைக் கண்டுபிடிப்பதற்கு விசித்திரமான ஒரு பரிசோதனையை ஆரம்பித்துஇருக்கிறார்கள். இதற்காக வெளி உலகுடன் ஒருவித தொடர்பும் அற்று காலம் என்று ஒன்று இருப்பதையே மறந்து, நிசப்தமான கண்டோரில் இரு பிரிட்டிஷ் மாணவர்கள் வாழப் போகிறார்கள். "காலவரம்பற்ற தன்மை" மனித உடலில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களை விஞ்ஞானிகள் படித்தறிய வாய்ப்பளிப்பதற்காக இம்மாணவர்கள் இப்படி வாழ முன்வந்திருக்கிறார்கள்.

இந்த மாணவர்கள் இருவார காலம் ஒரு ராட்சத கண்டிற்குள் இருப்பார்கள். ரப்பரில் மிதந்துகொண்டிருக்கும் இக்கண்டிற்குள் சப்தம், சாதாரண வெளிச்சம் அல்லது வெப்பம் புகமுடியாது. மாணவர்கள் படித்துக்கொண்டோ, நித்திரை செய்துகொண்டோ அல்லது தாம் விரும்பும் பாட்டுகளை ஒலிபரப்பு நாடாக்களில் போட்டுக் கேட்டுக்கொண்டோ தம் நேரத்தைப் போக்கலாம்.

அவர்களுடைய நெற்றியிலும், இருதயத்திற்கு அருகாமையிலும் பொருத்தப்பட்டிருக்கும் மின் அணுக்கள், அவர்களது சகல உடல் அசைவுகளையும் மற்றும் உடல் மாற்றங்களையும் பதிவுசெய்து கொண்டேயிருக்கும்.

ஒரு மனிதனின் இயக்கம், ஒரு நாளிலேயே நேரத்திற்கு நேரம் மாறுபடுகிறது. இம்மாறுபாட்டைக் கொணர்வது எது என்பதை அறி

வதற்கே இப்பரீட்சை! இவ்வாராய்ச்சியின் பேறுபேறு, அவர்கள் எதிர்பார்ப்பது போல் நன்மை பயக்குமாயின், நவீன விஞ்ஞான உலகிற்கோர் நல்லதோர் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

---


# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

வருடம் ரூபா 125/- வட்டி கொடுக்கப்படும்.

2. ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)

வருடம் ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்

குறிப்பு:-

இந்த ஜுபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/வாங்கப்படும்.

மறுவிபரங்களுக்கு:-

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை — திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.

# துணிகள் திருட்டு: சலவைத்தொழிலாளி தற்கொலை!

செமிகலடி செவ்வாய்

ஏருவூர் ஐயங்கேணி கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சம்பு (வயது 28) என்னும் சலவைத் தொழிலாளி கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் மேற்படி சலவைத் தொழிலாளியிடம் அவர் கடமைசெய்யும் வீட்டிலிருந்து பெறுமதிவாய்ந்த துணிகள் சலவை செய்வதற்காகக் கொடுக்கப்பட்டதாம். பின் அவைகளை எடுத்துச்சென்று அவரது வீட்டில் வைத்துவிட்டு மறுநாள் சலவை செய்வதற்கு துணிகளை எடுப்பதற்காக வீட்டினுள் போனபோது அத்துணிகள் களவாடப்பட்டிருந்தனவாம். பின் தன்னால் இயன்றளவு எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்காதுபோகவே மனமுடைந்த சலவைத்தொழிலாளி ஏருவூர் பொலிசில் முறையிட்டுவிட்டு அவரதுவீட்டைவிட்டு வெளியேறி அவர் தோளில் போட்டிருந்த துவாயை இடுப்பில் உடுத்திக்கொண்டு, தான் உடுத்திருந்த சாரத்தை மரமுந்திரிகை மரத்தில் கட்டி தானே தனது கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டாராம். மரணவிசாரணையில் இவ்விபரங்கள் தெரியவந்தன.

ஏருவூர்ப்பற்றுதிடீர்மரண விசாரணை அதிகாரி திரு.கே. எஸ். தம்பிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

லாலாசோப்

## கரபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி 'லாலாசோப்' ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெறும் 'மின்னொளி' கரபந்தாட்டப் போட்டியின், கடந்தவார முடிவுகள் வருமாறு:

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டி, தொண்டமானாறு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தை 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. பி. நடராசா இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

சிறுப்பிட்டி அண்ணா 'ஏ' பிரிவுக் கோஷ்டி, கைதடி சரஸ்வதி கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. ஆ. துரைச்சாமி மத்தியஸ்தம் வகித்தார்.

வல்வெட்டித்துறைஸ்போர்ட்ஸ் கிளப் பலாலி இராணுவக் கோஷ்டியை 'செற்அப்' போட்டியில் 3-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி இலந்திசன் விளையாட்டுக் கழகம், அச்சுவேலி ஸ்ரீ விக்கினேஸ்வரா கழகத்தை 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. ஆ. வேலும்மயிலும் மத்தியஸ்தம் வகித்தார்.

இமயாணன் விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டி, அச்சுவேலி மத்திய கழகத்தை 3-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. ஜே. எஸ். நல்லதம்பி மத்தியஸ்தம் வகித்தார்.

அச்சுவேலி முரசொலி 'ஏ' பிரிவுக் கழகம், இமயாணன் ஐக்கிய கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. ஆ. வேலும்மயிலும் மத்தியஸ்தம் வகித்தார்.

கெருடாவில் விவேகானந்தா கழகம், வதிரி டைமன் கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. ஜே. எஸ். நல்லதம்பி மத்தியஸ்தம் வகித்தார்.

இமயாணன் 'ஏ' பிரிவுக் கழகத்தை அச்சுவேலி யூஸ்ரார் கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. திரு. ஆ. வேலும்மயிலும் மத்தியஸ்தம் வகித்தார்.

உடுவில் ஸ்ரார் கழகம், புத்தூர் இரத்தினம்ஸ் விளையாட்டுக் கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டி, இலந்திசன் கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

கே. கே. எஸ். டெவலப்மன் கழகம், இமயாணன் கழகத்தை 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

பருத்தித்துறைஎதிரொளி விளையாட்டுக் கழகம், வல்வெட்டித்துறை குணசேகரா கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. (தே நி)

## கொடிகாமத்தில் முத்தமிழ்விழா

யாழ்ப்பாணம். திங்.

கொடிகாமம் சேர் பொன் இராமநாதன் கழகத்தின் இரண்டாவது ஆண்டு கலைவிழா இம்மாதம் 25ந் தேதி பண்டிதர் வித்துவான் சுந்தையினார் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கொடிகாமத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கழகத் தலைவர் திரு சி சி சி சிவராமலிங்கம்வரவேற்புரைநிகழ்த்துவார். கலையும் வாழ்வும் என்னும் பொருள்பற்றி ஆசிரியர் திரு. த. திருநாவுக்கரசு விரிவுரை நிகழ்த்துவார். வெண்சங்கு கதாநாயகன் அராலி புலவேந்திரன் சிறப்புரை வழங்குவார்.

சங்கானை 'கலைமகம்' நடத்திய நாடகப்போட்டியில் முதல் பரிசு பெற்ற 'ஒளி பிறந்தபோது' என்ற நாடகமும், 'ஏமாந்தகாரர்' என்ற நாடகமும் இடம் பெறும். நாதஸ்வரக் கச்சேரி, இசைக்கச்சேரி நடனம் கலாவினோதன் சுணபதிப்பிள்ளை கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு. கண்ணன்கோஷ்டியினரின் மெல்லிசை விருந்து உட்பட பலகலைநிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கிறது.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 22—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 திரைப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 கத்தோலிக்க நிகழ்ச்சி, 6-30 கண்ணகி காவியம், 6-45 கிராமியப் பாடல்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலந்துரையாடல், 10-00 நேயர் கேட்டவை. 10-30 செய்தித் தொகுப்பு.

## இராமசாமிஐயர் நினைவு அஞ்சலி

சாதி மத இன பேதமற்ற உயர்சமத்துவ சமுதாயத்தை உருவாக்கத் தம்மை அர்ப்பணித்த திரு. இராமசாமிஐயரின் நினைவு தினம் இன்று.

திரு. இராமசாமிஐயர் நல்லூரில் பிறந்து பிராமண குலத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் சாதி பேதத்தை உடைத்தெறியவும் திராவிடமைத் தமிழரின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்தார். சாதிப் பாகுபாடு பற்றிய மூடக்கொள்கைகளை முறித்தெறிய அல்லும் பகலும் பாடுபட்டார். இதில் ஊறித் திளைத்திருக்கும் மற்றையோருக்கும் இவர் ஒரு வழிகாட்டியாவார்.

வடக்கில் பொதுவுடமைக் கொள்கைகளை கடைப்பிடித்தோடு கார்ல்மார்க்ஸின் பொதுவுடமைக் கருத்துக்களை தமிழில் புத்தகவடிவில் வெளியிட்ட பெருமையும் இவருக்குண்டு.

—ஜெ.நாகேஸ்வரன்

# ஐரோப்பாவில் பதற்றத்தை தணிக்க நடவடிக்கை

மாஸ்கோ, செப்.21

"மேற்கு பேர்லின் பற்றிய நான்கு வல்லரசு ஒப்பந்தம், ஐரோப்பாவில் பதற்றத்தைத் தணிப்பதற்கான ஒரு முக்கிய நடவடிக்கை என்று நீங்கள் கூறுவதைச் சோவியத் அரசு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கும், மேற்கு பேர்லின் சூழ்நிலையை அபிவிருத்தி செய்வதற்கும், அந்தப் பிரதேசத்திலுள்ள குழப்பங்களையும் சிக்கல்களையும் அகற்றுவதற்கும், சோவியத் யூனியன் தன்னாலான பணி அனைத்தையும் செய்துள்ளது."

மேற்கு ஜெர்மன் சான்ஸலர் வில்லி பிராண்டுக்கு எழுதிய பதிலில் இவ்வாறு சோவியத் பிரதமர் கோஸிஜின் கூறியுள்ளார்.

"மேற்கு ஜெர்மனியுடன், மேற்கு பேர்லின் செனட்டுடனும் ஒரு முறையான உடன்பாடு காண்பதற்குத் தாங்கள் ஆயத்தமாக இருப்பதாக ஜி. டி. ஆர். கூறியுள்ளது; எனவே, ஜி. டி. ஆர். அரசுடன் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகள் பூரணவெற்றி பெற வேண்டும் என்ற மேற்கு ஜெர்மன் அரசின் விருப்பத்தைச் சோவியத்அரசு வரவேற்கிறது.

"சோவியத் யூனியனுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலான உறவுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றபெருநோக்குடன் 1970ம் ஆண்டு ஆக.12ல் இருநாடுகளும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன; நம்மிரு நாடுகளின் நலன்களுக்காகவும், ஐரோப்பாவில் அமைதியை வலுப்படுத்துவதற்காகவும், நம்மிடையிலான உறவுகள் மென்மேலும் வளர்க்கப்படும் என்று சோவியத் அரசு நம்புகிறது."

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம் செவ்வாய்

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோதுபின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: மா நாகேந்திரசீலன். துணைத் தலைவர்: கு கமலநாதன், செயலாளர்: நா ஜெயசீலன், துணைச்செயலாளர்: பூ. லோகராசா, பொருளாளர்: மா இராஜேந்திரசீலன். நாடகத்துறைத் தலைவர்: மு தேவராசா, விளையாட்டுத்துறைத் தலைவர்: ப ஞானேஸ்வரன்.

## மும்மொழியிலும் வங்கித்தொடர்பு

பருத்தித்துறை, செவ்.

இலங்கை வங்கியுடனும் அதன் கிளைகளுடனும் வாடிக்கைகாரர் எம்மொழியில் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுவதற்காக மேற்படி வங்கி தனது வாடிக்கைகாரருக்கு அதற்கான படிவங்களை அனுப்பியுள்ளது. இப்படிவங்களில் எம்மொழியும் குறிப்பிடாத வாடிக்கைகாரருக்கு உத்தியோக மொழியான சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பப்படுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், செவ்

நல்லாகம் மயானம் சிரமதானமூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது. கடந்த மூன்று வாரகாலமாக நல்லாகம் கிராமசபை உபதலைவர் திரு. சிவ. ஸ்ரீதரன் தலைமையில் இந்த மயானம் துப்புரவு செய்யப்பட்டது. அப்பகுதி இளைஞர்கள், பொதுமக்கள் இச்சிரமதான வேலைகளில் கலந்து கொண்டனர்.



## வேப்பங்கொட்டை தேவை

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் வைத்துப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.

சுந்தரம் பிறதர்ஸ்

ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள் வியாபாரிகள்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.




குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டர்ஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

## இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தம்

# இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அம்சங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

### உடன்பாட்டின் அம்சங்கள்

1. இரு நாடுகளிடையேயும் நிரந்தர சமாதானமும், மக்களிடையே நிலைபெற்ற நட்பும் ஏற்படும் என்று ஒப்பந்தகாரர் உறுதியாக பிரகடனப்படுத்துகின்றோம். எந்தநாட்டின் உள்விவகாரத்திலும் மற்றநாடு தலையிடாது என்ற உறுதிகூறலுடன் இருநாடுகளும் சுதந்திரத்தையும், இறைமையையும், எல்லைகளையும் கௌரவித்து வாழ இணங்குகிறோம்.

சமத்துவம், பரஸ்பர நன்மை என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் இரு அரசின் பிரதிநிதிகளும் மேலும் உண்மையான நட்பையும் நல்ல அயலவர்க்குரிய உறவையும் பல துறைகளிலும் ஒத்துழைப்பையும் வளர்த்துவர சம்மதிக்கின்றனர்.

2. ஆசியாவிலும் உலக அரங்கிலும் சமாதானத்தை நிலவச்செய்யும் நோக்குடன் ஆயுத உற்பத்திப் போட்டிக்கு முடிவுகட்டி பொதுவான முற்றான அணு சலவாயு ஆயுதங்களின்மீது நிலைபெறுன சர்வதேச கட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்த இருசாராரும் இணங்குகின்றனர்.

3. மக்கள் அனைவரினதும் சமத்துவத்தையும் அரசுகளின் சமத்துவத்தையும் இனமதபேதங்களுக்கு அப்பால் அமையவேண்டுமென்ற இரு அரசுகளும் நம்புவதால் ஒப்பந்தகாரர் குடியேற்ற ஆட்சிமுறையையும் இனத்துவேசத்தையும் வன்மையாகக் கண்டித்து அவற்றை முற்றாக அகற்றுவது என்று தீர்மானிக்கின்றனர். குடியேற்றநாட்டு ஆட்சி முறையையும் இன ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் மக்கள் அனைவரினதும் நன்நோக்கங்களையும் போராட்டங்களையும் ஆதரிப்பதுடன் இப்படி நோக்கங்களை நடேற்றமுன்வரும் அரசுகளுடன் ஒப்பந்தகாரர் இருவரும் இணைந்துசெயற்படுவர்.

4. இந்திய அரசு பின்பற்றிவரும் பக்கம் சேரா நடுநிலைமைக் கொள்கையை சோவியத் அரசு மதிப்பதுடன் இத்தகைய பெருநோக்கம் உலக அரங்கில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தி போர் பதட்ட நிலையை அகற்றியுள்ளது என்றும் சோவியத்நாடு நம்புகின்றது. சோவியத் அரசுபின்பற்றி வரும் நேசபூர்வமான அயல் உறவுக்கொள்கைகள் உலக மக்கள் அனைவருடனும் நட்பை வளர்ப்பதையே நோக்கமாகக்கொண்டுள்ளமையால் இந்திநிலையை இந்தியக்குடியரசு பெரிதும் மதிக்கின்றது.

5. உலகசமாதானம், பந்தோபஸ்து, பரஸ்பர ஒத்துழைப்பு, போன்ற நோக்கங்களை நடேற்றுவதற்காக ஒப்பந்தகாரர் இருசாராரும் அடிக்கடி தொடர்புகொண்டு இரு அரசுகளையும் பாதிக்கக்கூடிய பிரச்னைகளை ஒழுங்காக ஆராய்ந்து வருவர். மேலும் இரு அரசுகளின் தலைவர்களினதும் அரசப் பிரதிநிதிகளினதும், தூதுக்குழுக்களினதும், தூதரகங்களினதும் தொடர்புகளுக்கூடாக சர்வதேச உறவுகளை மேலும் வலுப்பெறச்செய்ய உழைத்து வருதல்.

6. பொருளாதார, அறிவியல், தொழில் நுட்பத்துறை ஒத்துழைப்புகளின் அவசியத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் இருநாடுகளும் உணருவதுடன் இருசாராரிடையேயும் வர்த்தகம், போக்குவரத்துப் போன்ற தொடர்புகளை மேலும் வளர்த்த இருநாடுகளும் ஒன்றுக்கொன்று சலுகைகாட்டி உதவிவரும். இதுவரையும் இருநாடுகளிடையும் நிலவிவந்த உடன்பாடுகளின் அடிப்படையிலும் அயல்நாடுகளுடன் மேலும் ஏற்படுத்திக் கொள்ளத்தக்க இறப்பு உடன்பாடுகளின் அடிப்படையிலும் இருநாடுகளும் ஒன்றோடொன்று சேர்ந்துசெயற்பட்டுவரும்.

7. ஒப்பந்தகாரர் இருசாராரும் அறிவியல், கலை, இலக்கியம், கல்வி, சுகாதாரம், அச்சகங்கள், வானொலி, ரெலிவிஷன், திரைப்படம், பிரயாணம், விளையாட்டுத்துறை ஆகிய அம்சங்களை ஆராய்ந்து இத்தத் துறைகளில் மேலும் நல்ல அபிவிருத்தியை ஏற்படுத்துவது என்று நம்புகின்றனர்.

அச்சுறுத்தப்படும் நிலையில் இத்தகையஆபத்தைஅகற்றிவிடும் நோக்குடனும் தமது நாடுகளின் சமாதனத்தையும், பாதுகாப்பையும் உறுவாக்கும் நேசக்கத்தையும் குறிக்கோளாகக் கொண்டு இருசாராரும் உடனடியாக பரஸ்பர கருத்துப்பரிமாறலில் ஈடுபடுவர்.

10. இயற்றப்பட்ட ஒப்பந்தத்தின் போக்கு நேசக்கங்களுக்கு முரணாக இரகசிய மாகவோ பகிரங்கமாகவோ ஒப்பந்தகாரர் பிறஅரசுகளுடன் அல்லது அரசுகளுடன்

**வ. பொன்னம்பலம் எம்.ஏ**

8. பாரம்பரியமாக இருபகுதியினரிடையேயும் வளர்ந்துள்ள நட்பைஆதாரமாகக்கொண்டு இருசாராரும் மற்றையவருக்கு எதிரான எந்த ராணுவ உடன்படிக்கையிலும் சேர்ந்து கொள்ளவதில்லை. இருசாராரும் ஒருவருக்கெதிராக மற்றையவர் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்றும் எந்த ஒரு நாடும் அடுத்த நாட்டிற்கு இராணுவத்துறையில் அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையில் தமது பிரதேசத்தை பயன்படுத்த அனுமதிப்பதில்லை என்றும் இருசாராரும் சம்மதிக்கின்றனர்.

9. ஒப்பந்தகாரர் எவரும் அவர்களுடன் படைப் பூசலுக்குள்ளாகிய எந்த ஒரு நாட்டிற்கும் எத்தகைய உதவியும் கொடுப்பதில்லை. ஒப்பந்தகாரர் எவரேனும் பிறரால் தாக்கப்படும் பட்சத்தில் அல்லது தாக்கப்படலாம் என்று

எந்த உறவும் வைப்பது இல்லை என்றும் ஒருவருக்கொருவர் இராணுவ பாதிப்பு ஏற்படஅனுமதிப்பதில்லை என்று தீர்மானிக்கின்றன.

11. இன்றைய ஒப்பந்தம் இருபது ஆண்டுகள் நிலைபெறும் என்றும் இக்கால முடிவில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் அதுதானாகவே நடைமுறைக்கு வருமென்றும் இருசாராரும் இணக்கம் தெரிவிக்கின்றனர். ஒப்பந்தகாரர் எவரேனும் இந்த ஒப்பந்தத்தை முற்றுப் பெறச்செய்ய விரும்பின் ஒப்பந்த காலக்கெடு முடிவடைவதற்கு பன்னிரண்டு மாதங்களுக்கு முன்பே முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட இன்று முதல் ஒரு மாதகாலம் முடிவடைவதற்குள் மொஸ்கோவில் இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இதுநடைமுறைக்குவரும்.

12. இந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள அம்சங்களின் வியாக்கியானம்பற்றி வேற்றுமைகள் ஏற்படுமாயின் ஒப்பந்தகாரர் இருசாராரும் சமாதான சூழலில் பரஸ்பர நன்மதிப்பு, நட்பு ஆகிய உணர்வுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வேற்றுமையை தீர்த்துக்கொள்வது. இந்த ஒப்பந்தம் ருஷிய மொழி, இந்தி மொழி, ஆங்கில மொழி மூன்றிலும் தயாரிக்கப்பட்டு அனைத்தின் வாசகங்களும் தெளிவாக அமைந்துள்ளதை கண்டு அரச முத்திரையிட்டு கைச்சாத்திடுகின்றோம். இந்த உடன்பாடு புதுடில்லியில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் 9-ம் நாள் ஆக்கப்பட்டது.

சோவியத் அரசுக்காக கைச்சாத்திட்டவர்: ஏ. குரோமிக்கோ (அயல் உறவு அமைச்சர்).

இந்திய அரசுக்காக கைச்சாத்திட்டவர்: சுவரண்சிங் (அயல் உறவு அமைச்சர்).

### ஒப்பந்தத்தின் முக்கியத்துவம்

எந்த ஒரு அரசும் பிறிதோர் அரசால் அச்சுறுத்தப்படும் ஆபத்து ஏற்படுமாயின் அல்லது தாக்கப்படுமாயின் ஒப்பந்தகாரர் ஆகிய மற்றைய அரசு சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் நோக்குடன் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ள அம்சம் இராணுவ பூசல்களைத் தடுத்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதையே நோக்காகக்கொண்டுள்ளது. இது பற்றி உலகத்தலைவர்கள் பல அனுதாபத்துடன் ஆராய்ந்து வருகின்றனர். மேலும் அந்தந்தநாடு பொருத்தமான விளக்கங்களையும் விவாசிக்கபரணங்களை

(6ம் பக்கம் பார்க்க)


இலங்கை ஆயுள்வேத கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்

ஆசவங்கள் — அரிஷ்டங்கள்

லேகியங்கள் — சூறணங்கள் — மருந்துச்சரக்குகள்

மேற்படி கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜண்டு பாமஸி

[ZANDU PHARMACY - BOMBAY]

ஆசவங்கள் — அரிஷ்டங்கள்

லேகியங்கள் — சூறணங்கள் — பஸ்மங்கள்

மற்றும்

பிரபல ஆயுள்வேத வைத்தியர்கள், பார்மஸிகள் தயாரிக்கும்

மருந்துகள் — குளிகை வகைகள்

சூறணங்கள் — தைலங்கள்

மற்றும்

குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, தைலங்கள் எண்ணெய்வகைகள், மருந்துச்சரக்குகள் எப்பொழுதும் மலிவாகக் கிடைக்கும்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825



இதோ! ரோமியா பரவசமூட்டும் ஓர் புதிய பவுடர்!

பசுமையும் நீடிக்கும் சுகந்தமும் கொண்ட ரோமியா, விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க். மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரோமியா தடவுக!




சிறப்புமிய, இன்றே ஒரு டின் ரோமியா வாங்குக! எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். விலை ரூ. 2/35




ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

GRANT 32 73 71

## மணிவாக்கு

தன்னை உணவுக்குஉழைக்கும்படி மக்களை ஆண்டவன் படைத்தான். உழைக்காமல் உண்பவர்கள் திருடர்களேயாவர். —காந்தியடிகள்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

விரோதிகிருது வருஷம் புரட்டாதி மாதம் 6-ந் திகதி (22-9-71)


## மாணவர் பிரச்னை

மாணவர்களிடையே ஏற்படும் கிளர்ச்சிகள் ஆபத்தானவை என்று நினைக்கத் தேவையில்லை என்றும் அவர்களை அடக்கி ஒடுக்கி, வெறும் தலையாட்டிப் பொம்மைகளாக்குவதாயின் அது வருந்தத்தக்கதாகுமென்றும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற அதிபர் திரு என். சபாரத்தினம் அவருக்கு அங்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் பேசுகையில் சரியாகக் குறிப்பிட்டார்.

கல்லூரிகளில் சாதுவாகவுள்ள மாணவர்களைவிடச் சற்றே துடிப்பாகவுள்ள மாணவர்களே வாழ்க்கையில் அதிக வெற்றி பெறுவதைப் பார்க்கின்றோம். சமூகத் தலைவர்களாகி துணிச்சலுடன் காரியங்கள் செய்ய உற்சாகமும் துடிதுடிப்புமுள்ள மாணவர்களே அதிகம் தகுதியாகின்றார்கள்; சிறிய வகுப்பு மாணவர் விஷயமாக அதிக பிரச்னையில்லை. ஆனால் பெரிய வகுப்பில் படிக்கும் மாணவர்கள் விஷயந்தான் பிரச்னையாகின்றது.

15 வயதுக்கு மேற்பட்டுவிட்டால் அம்மாணவர்களை ஆசிரியர்கள் தங்கள் நண்பர்கள் போல் கருத வேண்டுமென்று ஆசாரிய விஷேயமாகவே கருதலாம். தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்று ஒரு வசனமுண்டு. வாலிப உற்சாகத்தில் ஏதாவது தவறு செய்துவிட்ட மாணவர்களை வெறுத்து கடுமையாகத் தண்டிக்காமல் அனுதாபத்துடனும் அன்புடனும் அவர்களைத் திருத்த முற்படுவதே ஆசிரியர்களின் மேலான கடமை. இதற்கு அதிக பொறுமையும் சாமர்த்தியமும் வேண்டும். விஷமம் செய்யும் துடிதுடிப்புள்ள மாணவர்களை அன்பு வழியில் "தண்டித்து" அவர்களைக் கடைத்தேறும்படி செய்த ஆசிரியமணிகள் பலருண்டு. அப்பேர்ப்பட்ட ஆசிரியர்களை சம்பந்தப்பட்ட மாணவர்கள் தங்கள் ஆயுள்வரை நன்றியுடன் போற்றுவர்.

பள்ளிக்கூடத்தில் உயர் வகுப்பில் படிக்கும் மாணவர்களில் பலரும் இன்று அநேகமாக மனமுடைந்த நிலையில் உள்ளனர். படித்தபின் வேலை கிடைக்காதென்றும் படித்தும் என்ன பயன் என்றும் நினைக்கும் மாணவர்களுக்கு வாழ்க்கையில் புது நம்பிக்கையும் உற்சாகமும் அளிக்க வேண்டியது மிக அவசியம். இப்பெரும் பொறுப்பு ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோர்கள், அரசியல்வாதிகள், சமய போதகர்கள் பத்திரிகைகள் எல்லாரையும் சேருமென்கிறார் திரு. சபாரத்தினம்.

துரதிருஷ்டவசமாக இன்று பெற்றோர்களில் பெரும்பாலோரும் தங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் போதிய அக்கறை காட்டுவதில்லை. அரசியல்வாதிகளில் பலர் மாணவர்களைத் தங்கள் கட்சி நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றார்கள். மாணவர்களின் படிப்பு பாழாகி அவர்கள் வாழ்க்கை குட்டிச்சுவரானாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களைப் பலாத்கார வழிகளில் தூண்டிவிடுவதுமுண்டு. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் நம் இலங்கையிலும் சிறப்பாக வடபகுதியிலும் நிலைமை அவ்வளவு மோசமில்லை.

என்றாலும் நம் மாணவர்களுக்கு வாழ்விலே புதிய நம்பிக்கை அளிக்கவும் அவர்கள் நல்ல பிரஜைகளாக வளரவும் கூடுமான யோசனைகளையும் உதவிகளையும் அளிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் அரசியல் தலைவர்களையும் சாரும். மாணவர்கள்தான் இந்நாட்டின் செல்வம். "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்நாடு இருக்குது தம்பி" என்று சினிமாப் பாட்டுண்டு. நம் மாணவர்களை நம்பித்தான் நாட்டின் எதிர்காலமும் உள்ளது. அவர்களை ஏதோ பிரச்னைகளாகக் கருதாமல் அவர்களது குறைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்ய அரசாங்கமும் ஆவன செய்வது அவசியம். அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்க்காமலும் சம்பள அடிமைகளாக வேண்டுமென்று விரும்பாமலும் சுதந்திரமாக ஏதாவது பயனுள்ள தொழில் செய்து தியாக வாழ்க்கை வாழ வேண்டுமென்ற தேசாபிமான உணர்ச்சி எந்த மாணவருக்கு இருக்கிறதோ அவர்கள் நாட்டுக்கு மிகவும் பயன்படுவதுடன் அதனால் அவர்கள் வாழ்க்கையும் வெற்றி பெறுவதாகவும் இருக்கும்.

# சிறுவர் பராமரிப்புக்கு ரூ.8 லட்சத்து 75 ஆயிரம்!

கோட்டை, செவ். சிறுவர் பராமரிப்பு நன்கொடையாக அரசாங்கம் 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. 1969—1970-ம் ஆண்டு வரை 2333 அநாதைக் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

## சீனப் பிரதமர்

நியூயோர்க், செப் 21 ஐக்கியநாடுகள் சபையில் சீனாவின் அங்கத்துவம் பற்றி விவாதிக்கப்படவிருக்கிறது! இச்சந்தர்ப்பத்தில் சீனப்பிரதமர் சூ-என்-லாய் ஐ. நா. வுக்கு விஜயம் செய்யலாமென பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# தொலைபேசி தாமதத்துக்கு இலவச 'கோல்'களே காரணம்!

—தபால் அமைச்சர்

யாழ்ப்பாணம், செவ். 'அரசாங்க இலாகாக்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் இலவசமாக தொலைபேசி பாவித்துவருவதாலேயே பொதுமக்கள் தொலைபேசி தொடர்புகொள்ள காலதாமதம் ஏற்படுகிறது. மகாதேசாதிபதி பிரதம மந்திரி தவிர்ந்த மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் எல்லாரும் பணம் செலுத்தி தொலைபேசி பாவிக்கும் நிலைமை ஏற்பட்டால் தொலைபேசி காலதாமதமாகும் குறைபாடு நீங்கிவிடும்' தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் நமது நிருபருக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு- யாழ்ப்பாணம் தொலைபேசித் தொடர்பு காலதாமதமாவதற்குக் காரணம் என்ன? என்று நமது நிருபர் கேட்டபோது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 50 வருடகாலமாக தந்தி தொலைபேசி உபகரணங்கள் புதுப்பிக்கப்படாதது ஒரு காரணமும் மற்றது தந்திக்கம்பிதிருட்டு தினமும் நடைபெற்றுவருவது ஒரு காரணமுமாகும் இதனால் தொலைபேசித் தொடர்புகள் பாதிக்கப்படுகிறது

தனிப்பட்ட தொலைபேசி 'கோல்'களினால் பொதுமக்கள் தொலைபேசித் தொடர்புகொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்க இலாகாவில் சென்று எவரும் உத்தியோகபூர்வமான 'கோல்' என்று கூறி தொடர்பு கொள்கிறார்கள். இதனை உடனுக்குடன் சோதனை செய்யமுடியாமலிருக்கிறது.

கடந்த 50 வருடத்திலும் பார்க்க நாட்டின் சனத்தொகை இப்பொழுது கூடியுள்ளது மக்கள் தேவையும் அதிகரித்துள்ளது. மக்கள் முந்தினமாதிரி உடன் தொடர்புவைக்க விரும்புகிறார்கள். ஆனால் இதேவேளையில் உபகரணங்கள் கூட்டப்படவில்லை. உபகரணங்களை அதிகரிப்பதற்கு அந்நியச் செலாவணி ஒரு பிரச்னையாக இருக்கிறது. இக்குறைகள் நீக்கப்பட்டால் தான் காலதாமதமின்றி மக்கள் தொலைபேசித் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்

சாவகச்சேரி நல்லூர் தொகுதிகளில் தற்பொழுது ஒவ்வொரு பெரிய தபாற் கந்தோர் இருப்பதாகவும் மேலும் ஒவ்வொரு பெரிய தபாற் கந்தோர் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

தபால் தந்தி அத்தியட்சகர் பிரிவுகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவகாலத்தில் அங்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கோவிலருகில் தற்காலிக தபால் நிலையம் ஒன்றை அமைக்க உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கடமையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீர்கேட்டை விரைவில் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பேசும்போது, அதிகரித்துள்ள தொலைபேசி கட்டணத்தை குறைப்பது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்றார்.

யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேசும்போது, திரு. குமாரசூரியர், தபால் அமைச்சராக வந்தபின், யாழ்ப்பாணத்தில் 3 உபதபால் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் பல அபிவிருத்திகள் நடைபெறவிருப்பதாகவும் தெரிவித்தார்.

புரக்டர் பிரான்ஸிஸ் நன்றி தெரிவித்தார்.

(தே நி)

## சமாதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழிபாட்டு இடங்களை அரசாங்கம் பேணவேண்டும். பெரும்பான்மையோரின் மதமாகிய பௌத்தத்தை அரசாங்கம் பாதுகாக்கவேண்டும்.

மேலும் தற்போது நடைபெறும் சிம்மாசனப் பிரசங்கத்துக்குப் பதிலாக குடியரசுத்தலைவர் சட்டசபைப்பருவம் ஆரம்பமாகும்பொழுது அரசின் கொள்கையின் அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் எனத் திரு பண்டாரநாயக்கா இந்நகல் திட்டத்தில் குறிப்பிடுகிறார்.

## இன்று

யாழ்ப்பாணம் புதன் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நவராத்திரி 3ந் திருவிழாவான இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் தேவி மகாத்மியம் என்ற தொடரில் "மகிஷாசுர வர்ணம்" என்ற பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் பின் 7 மணிக்கு கொலு அம்மன் பூஜையும் நடைபெறும்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இரத்தினபுரியில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கரித்துக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிரிந்தில அவிசாவலை வீதியிலுள்ள 37, 45, 49 வது கட்டைகளில் இரண்டடித் தண்ணீர் பாய்வதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் சில பகுதிகளில் மண் சரிவு ஏற்பட்டிருப்பதினால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் கருமேகம் சூழ்ந்திருப்பதோடு அதிக காற்றும் இடியோடுகூடிய மின்னலும் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரு நாடுகளுக்குமிடையே

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இப்பகுதி பற்றி சொல்லவும் தொடங்கியுள்ளன.

இந்தோ-சோவியத் உடன்படிக்கை எந்தவொரு நாட்டையும் தன்புறத்தவோ அன்றி பிறநாடுகளுக்கெதிராகவோ அமைக்கப்பட்டதல்ல. சர்வதேச அரங்கில் இந்தியாவும் சோவியத் நாடும் ஒத்தகருத்துக்கள் கொண்டு செயற்பட்டுவந்துள்ளன. வருகின்றன. இந்தோ சீனாவில் ஏற்பட்டுள்ள போர், மத்தியகிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஐரோப்பிய பாதுகாப்பு, ஆயுதப்பரிகரணம், இனவாதம், குடியேற்ற நாட்டுவாதம் போன்ற நிலைகளிலிருந்து உலகை மீட்டல் ஆகிய பிரச்சினைகளில் ஏகோபித்த அபிப்பிராயம் இருநாடுகளிடையேயும் நிலவுகின்றது.

சோவியத் மக்களும் இந்திய மக்களும் உலகில் சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் நாடிநிற்கும் சகல மக்களும் இந்த அதிமுக்கியத்துவம்பெற்ற உடன்படிக்கையை வாழ்த்தி வரவேற்றுள்ளனர். கிழக்குப் பாகிஸ்தான் நிகழ்ச்சிகளால் பீதியடைந்திருந்த மக்கள் இந்த உடன்பாடுகண்டு திருப்தி தெரிவித்துள்ளனர். இந்தியாவிற்கு ஓர் நெருக்கடியான காலகட்டத்தில் இந்த ஒப்பந்தம் ஓர் பெரும் கவசமாக விளங்குகின்றது.

இந்திய காங்கிரஸ் கட்சியைச்சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர் அவர்களின் வார்த்தையில் கூறப்போனால் 'இந்தியா முழுமையிலும் வாழ்ந்து வரும் மக்கள் அனைவரும் இந்த ஒப்பந்தம் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றனர்' என்று கூறியுள்ளார். இந்திய அரங்கின் சகல அரசியல்கட்சிகளும் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட உடன்படிக்கையாக இது அமைகின்றது. இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக எவரும் துணிந்து குரல்கொடுக்க முடியவில்லை என்றால் இந்தியா ஏகோபித்து இவ்வுடன்பாட்டை வரவேற்றுள்ளது என்றுதான் கூறவேண்டும். கெய்ரோவிலிருந்து வெளிவரும் அல்கொம் ஹௌரியா என்ற பத்திரிகை மேற்கண்டவாறு கூறுகிறது. "உலகெங்கும் பொதுவாகவும் ஆசியாவில் குறிப்பாகவும் சோவியத்நாடு பின்பற்றிவரும் சமாதானக் கோட்பாடுகளுக்கும் இந்தோ-சோவியத் நாடுகளிடையே நிலவிவந்த நட்பிற்கும் இந்த உடன்பாடு சிகரமாக விளங்குகிறது. ஆஷை என்ற ஜப்பானிய பத்திரிகை இந்த நட்புறவு உடன்பாடு முழுஆசியாவின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. எனினும் உலகில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க வட்டாரங்களில் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக ஆவேசக்குரல் எழும்பியுள்ளன. நடுநிலையிலிருந்து இந்தியா விலகிவிட்டதாகவும் டில்லி மாஸ்கோ ஒப்பந்தம் போராபத்தானதென்றும் சில மேற்கு நாடுகளில் அபிப்பிராயம் கூறப்பட்டுள்ளது.

இவ்வுடன்பாட்டின் எதிர்காலம் செயற்பாடு தென்கிழக்காசியாவின் எதிர்காலத்தையும் ஏன் உலகின் பொதுப் போக்கையும்கூட நிச்சயம் நன்னெறிப்படுத்தும்.

(முற்றும்)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க